**செய்தி வெளியீடு எண் : 1128** **நாள் : 08.06.2023**

# செய்தி வெளியீடு

ஜெர்மனியின் கொலோனில் ஜெர்மன் விளையாட்டு பல்கலைக் கழகத்தில் 30.07.2023 முதல் 05.08.2023 வரை நடைபெற உள்ள 8வது உலக அளவிலான குள்ள மனிதர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள உள்ள தமிழ்நாடு வீரர்களான திரு. செல்வராஜ் அழகப்பன் (புதுக்கோட்டை), திரு. கணேசன் கருப்பையா (மதுரை) மற்றும் திரு. மனோஜ் சிங்கராஜா (மதுரை) ஆகிய மூவருக்கும், நுழைவுக் கட்டணம், விமானச் கட்டணம், உள்ளூர் போக்குவரத்துக் கட்டணம், விசா செலவுகள் மற்றும் சீருடை செலவினம் ஆகியவற்றுக்கான தொகையாக தலா ரூ.2,49,200/- என மூவருக்கும் மொத்த தொகை ரூ.7,47,600/- க்கான காசோலையினை **மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் இன்று (08.06.2023) பசுமை வழிச்சாலையில் உள்ள முகாம் அலுவலகத்தில் வழங்கினார்.

மேலும், புது தில்லியில் 25.04.2023 முதல் 28.04.2023 வரை நடைபெற்ற 2வது தேசிய செரிபிரல் பால்சி (Cerebral palsy) தடகள சாம்பியன்ஷிப் போட்டி மற்றும் 02.06.2023 முதல் 04.06.2023 வரை நடைபெற்ற 2வது தேசிய செரிப்ரல் பால்சி (Cerebral palsy) கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கங்கள் வென்ற பெருமூளை வாதத்தினால் பாதிக்கப்பட்ட தடகள மற்றும் கால்பந்து வீரர்கள் 17 பேர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர். அவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.ஜெ.மேகநாத ரெட்டி, இ.ஆப., அவர்கள், சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in